# இளஞ்சுடர்

சிந்திப்போம் செயல்படுவோம் - சிகரம் தொடுவோம்

சுடர் : 1 ஜீன் 2016 ஒளி : 5

காலாண்டிதழ்



**திருமதி. ருத்ரவேணி தாயாரம்மாள் அவர்கள்**

(12.06.1923 - 28.02.2016)

தமிழ்த்துறை (அரசுநிதி பிரிவு)

**ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி** (தன்னாட்சி)

**உடுமலைப்பேட்டை**

Scanned by CamScanner



கல்லூரி தேசிய மாணவர் படையுடன் கல்லூரியின் முன்னாள் முதல்வரும்
தமிழ்த்துறை தலைவருமான திருமதி.ஏ.ஆர்.இந்திரா அவர்கள்



# இளஞ்சுடர்

சிந்திப்போம் - செயல்படுவோம் - சிகரம் தொடுவோம்

சுடர் : 1 ஒளி : 5
காலாண்டிதழ் ஜீன் 2016



தமிழ்த்துறை (அரசுநிதி பிரிவு)

**ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

உடுமலைப்பேட்டை

Scanned by CamScanner

## உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| தமிழ் அறிவோம் | 4 |
| முனைவர் ஏ.ஆர்.இந்திரா | 5 |
| பெண்ணே நீ... | 7 |
| பெண்ணியம் போற்றுவோம் | 8 |
| சிலப்பதிகாரம் கூறும் அணி வகைகள் | 10 |
| தேர்வறை | 11 |
| முயற்சி செய் , இராணி லட்சுமிபாய் | 12 |
| என் அம்மாவிற்காக... | 13 |
| இலட்சியம் | 14 |
| என் அன்புத் தோழிக்கு | 15 |
| வாழ்க்கை | 16 |
| இளைய பாரதமே எழுந்து வா ! | 17 |
| அம்மா | 19 |
| மழை | 20 |
| ஆண்டறிக்கை 2015 - 16 | |
| செந்தமிழ் மன்றச் செயல்பாடுகள் | 21 |






## ஆசிரியர் உரை

இவ்விதழ் தமிழ்த்துறையின் 5ஆவது படைப்பாக வெளி வருகின்றது. நம் பெருமைக்குரிய நிறுவனரின் மூத்த மகளான **திருமதி.ருத்ரவேணி தாயாரம்மாள்** அவர்களின் நினைவு இதழாக வருவதில் தமிழ்த்துறை பெருமை கொள்கிறது.

திருமதி.ருத்ரவேணி தாயாரம்மாள் அவர்கள் 12.06.1923 அன்று பிறந்தார்.இவர் ஜி.வி.ஜி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் தெய்வத்திரு கோ.வெ.கோவிந்தசாமி நாயுடு ஐயா அவர்களின முதல் மகள் ஆவார். வணக்கத்திற்குரிய கல்லூரிச் செயலர் திருமதி.சுமதி கிருஷ்ணபிரசாத் அவர்களின் பாட்டியும் ஆவார். ருத்ரவேணி பாலிடெக்னிக் கல்வி நிறுவனத்தின் நிறுவனர். தெய்வத்திரு. ஆர்.முத்துசாமி நாயுடு அவர்களின் இனிய துணைவியார். தம் தந்தையாரைப் போலவே நற்பண்பும் நல் சிந்தனையும் வாய்க்கப் பெற்றவர். இவருக்கு மக்கள் நால்வர். இவர் இறக்கும் தறுவாயிலும் தம் தந்தை நிறுவிய கல்லூரியின் வளர்ச்சி குறித்தும், விடுதி வசதி குறித்தும் விடுதி மாணவியர் குறித்தும் பேசிக் கொண்டேயிருந்தார் என்று செயலர் அவர்கள் கூறியது மிகுந்த மன நெகிழ்ச்சியை அளிப்பதாக உள்ளது.

இவர் தமது 94ஆவது வயதில 28.02.2016 ஞாயிறன்று இறைவனடி சேர்ந்தார். இவர் தமக்கு என்றென்றும் வணக்கத்தை தமிழ்த்துறை வழங்கி மகிழ்கின்றது.



முனைவர் ப.தமிழ்ப்பாவை
தமிழ்த்துறைத் தலைவர்



Scanned by CamScanner

## தமிழ் அறிவோம்...

| | | |
|---|---|---|
| 10000000000000000000 | - | பாரத்தம் |
| 100000000000000000000 | - | பூரியம் |
| 1000000000000000000000 | - | முக்கோடி |
| 10000000000000000000000 | - | மஹாயுகம் |

| | | | |
|---|---|---|---|
| க | - 1 | ள | - 100 |
| உ | - 2 | ளருயசா | - 156 |
| ங | - 3 | உள | - 200 |
| ச | - 4 | கூள | - 300 |
| ரு | - 5 | சு | - 1000 |
| சா | - 6 | சுக | - 1001 |
| எ | - 7 | ஆசW | - 1040 |
| அ | - 8 | அ சு | - 8000 |
| கூ | - 9 | ய சு | - 10,000 |
| W | - 10 | எWசு | - 90,000 |
| Wக | - 11 | ளசு | - 100,000 |
| Wஉ | - 12 | அளசு | - 1,000,000 |
| Wங | - 13 | கூயளசு | - 9,000,000 |
| Wச | - 14 | ளளசு | - 10,000,000 (கோடி) |
| Wரு | - 15 | யளளசு | - 1,000,000,000 (நூறு கோடி) |
| Wசா | - 16 | தளளசு | - 100,000,000,000 |
| Wஎ | - 17 | | (பத்தாயிரம் கோடி) |
| Wஅ | - 18 | ளசுளளசு | - 1,000,000,000,000 |
| Wகூ | - 19 | | (லட்சம் கோடி) |
| உW | - 10 | ளளசுளளசு | - 100,000,000,000,000 |
| | | | (கோடி கோடி) |

- முனைவர். **வி.வசுமதி**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை





# முனைவர் ஏ.ஆர். இந்திரா

**(1928 - 2016)**

முனைவர் ஏ.ஆர்.இந்திரா அவர்கள் 1928 ஆம் ஆண்டு பிறந்தவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.லிட்., பட்டம் பெற்றவர். இவரது கல்விப்பணி சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் 1.7.48 அன்று தொடங்கியது. 15.1.69 வரை அப்பணியைத் தொடர்ந்தார். 1975 முதல் 1979 வரை ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றினார். அதன் பின்னர் 3.08.1979 அன்று நம் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றார். 1979 முதல் 1985 வரை கல்லூரி முதல்வராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் தம் பணியைச் செவ்வனே செய்தார். 1985 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார்.

பன்முக ஆற்றல் வாய்க்கப் பெற்றவராய் விளங்கினார். இசையோடு பாடுவதிலும், இசை அமைத்து பாடுவதிலும் வல்லவர். கம்பராமாணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கம்பராமாயணச் சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவர். சொல்லின் செல்வர். ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் குழுவில் இணைந்து பல்வேறு இடங்களுக்கும் கம்பராமாயணச் சொற் பொழிவுகளுக்குச் செல்பவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

தாம் ஜி.வி.ஜி யில் முதல்வராகப் பொறுப்பேற்ற காலம் முதல் கல்லூரிக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உந்துதலோடு வாழ்ந்தவர் ஜய ஜய போற்றி - என்று தொடங்கும் பாடலை எழுதி இசையமைத்துத் தந்தார். அப்பாடல் தான் இன்றும் நாம் பாடிக் கொண்டிருக்கும் கல்லூரிப் பாடல். இன்று நம் கல்லூரியின் பேரவை குறித்து நாமறிவோம். இப்பேரவையைத் தோற்றுவித்தவர் இவரே. பேரவை மூலமாகத்தான் கல்லூரியின் செயல்பாடுகள் வடிவமைக்கப்பட வேண்டும் என்பதுணர்ந்து பேரவையைத் தோற்றுவித்து. அதற்கான செயல்திட்டங்களையும் வரையறை செய்தார். மாணவத் தலைவர், செயலர், துணைச் செயலர் மூவருக்கும் அங்கிகள் அணிவதை நடைமுறைப்படுத்தினார்.



Scanned by CamScanner

கல்லூரியில் முதுகலை இல்லை என்ற குறை நீங்க முதுகலை வரலாறு கொண்டு வரத் துணை நின்றார். கல்லூரி ஆசிரியர்கள் பலரை எம்.ஃபில் என்ற இளமுனைவர் பட்டம் பெறச் செய்தார் என்ற தகவலை நம் கல்லூரியின் முதல்வர் முனைவர் கி.புனிதவல்லி அவர்கள் மனநிறைவோடு பகிர்ந்து கொண்டார்.

கல்லூரி நிர்வாகத்துக்கும், முதல்வருக்கும் தமிழ்த்துறைக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்து அனுப்ப மறந்ததே இல்லை. இவ் ஆண்டும் அனுப்பிருந்தார். தான் முதல்வராகப் பணிபுரிந்த கல்லூரிக்கு எல்லாவகையிலும் நன்றியறிதலோடு வாழந்தார். தம் வாழ்வின் இறுதிநாட்களை சென்னையில் ஒரு முதியோர் இல்லத்தில் கழித்தவர். 16.01.2016 அன்று இயற்கை எய்தினார்.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க அவர் பற்றிப் பேசுவதே எமக்குப் பெருமையாக உணர்கின்றோம். தனக்கு வாழ்வளித்த கல்லூரியையும் கல்லூரி நிறுவனரையும் பெரும் நன்றியறிதலோடு எந்நாளும் போற்றியவர். செம்மையான வாழ்வு வாழ்ந்து பலருக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். யான் போற்றும் பெண்மணிகளுள் மிகுந்த பெருமைக்குரியவர் இவரே. தமிழ்த்துறையினராகிய நாங்கள் அவரைப் பார்த்ததுமில்லை, பழகியதுமில்லை. கேள்விச் செல்வம் மட்டுமே. இருப்பினும் அவர் எங்களை மறந்ததில்லை என்றும்

புணர்ச்சி பழகுதல் வேண்டாம் – உணர்ச்சிதாம்
நட்பாங் கிழமை தரும்

என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். நல்மனத்தினர். மனித நேயம் மிக்கவர், அன்பொன்றையே அவர் விரும்பியிருந்தார்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க நல்லார் சொல் கேட்பதும் நன்றே. இறுதி வரை அவரைப் பார்க்காமல் பழகாமல் இருந்து விட்டோமே என்ற எண்ணம் எம் நெஞ்சை விட்டு அகலாது.

தமிழ்த்துறையின் சார்பில்
– முனைவர் ப.தமிழ்ப்பாவை





# பெண்ணே நீ ....

– முனைவர் ப.தமிழ்ப்பாவை

பெண்ணே இன்று தான் உனக்கு
மகளிர் தினமாம்....
எனக்குள் இன்றும் ஒரு கேள்வி ?
என்றும் நீ இரண்டாம் நிலை தான்
என்பதை உணர்த்தவா இப்படி ஒரு நாள்...
ஏனைய நாட்கள் எவருக்காம் ?
பொறுமை, விடாமுயற்சி, தன்னலமறுப்பு, தாய்மையுணர்வு
போற்றும் உழைப்பு, கண்ணிய பேச்சு, கனிவான மனம்
போதுமே இவையெல்லாம் உனக்கே உனக்கு !
பொறுமையாய் இருப்பதற்கு அளவு வேண்டும்
பொங்கி எழுவதற்கும் துணிவு வேண்டும்
சிகரத்தை நோக்கியா சென்று கொண்டிருக்கின்றோம் ? !
உன்னைப்பற்றியே உனக்குள் எப்போதும்....
உலகம் பற்றியா நினைக்கப் போகின்றாய் ?
தன்னலமற்றது தாய்மை என்பர்
இந்நலம் உணர்ந்தோர் எத்தனை பேர் உலகினில்
அடுத்தவர் பற்றிப் பேசுதல், ஆதாயம் தேடுதல்,
எடுத்ததற்கெல்லாம் குறைபேசித் திரிதல்,
எவர் எப்படி என்றாலும் எடுத்தரிந்து பேசுதல்
அடுத்தவரின் நலம் கருதிப் பொறாமை கொள்ளுதல்,
நாம் செய்வது தான் சரியென்று நினைத்தல்,
அனுபவத்தைப் பெறலாம் என்ற ஆர்வமின்றி இருத்தல்,
உன்னை வீழ்த்தும் கணைகள்....
நாட்களைத் திட்டமிடு, காலைத்தை கைக்கொள்
நலம், தீங்கு எதிலும் நன்மையைக் கொண்டாடு
உழைப்பு : உன்னத எண்ணம் : கனிவான பேச்சு
உன்னை உயர்த்தும் இப்பாரினில்
உயர்ந்திடு இன்றே பெண்ணே நீ....





Scanned by CamScanner



# பெண்ணியம் போற்றுவோம்

- முனைவர். மா.போ.ஆனந்தி
துணைப் பேராசிரியர் - தமிழ்த்துறை

சமூகத்தின் சரிபாதியான பெண் இரண்டாயிரம் ஆண்டுகளாகச் செக்கு மாட்டு வாழ்வினையே வாழ்ந்து கொண்டிருக்கிறாள். சமுதாயமும் ஆண்களையே முன்னிலைப்படுத்தி மதிப்பளித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட சமூகக் கட்டுப்பாட்டினைக் கடந்து ஒரு சில பெண்கள் புறவாழ்வில் ஈடுபட்டுத் தன் உரிமையை, சுயத்தை, தற்சார்பு நிலையை வெளிப்படுத்தலே பெண்ணியமாகக் கருதப்படுகிறது.

பெண்களுக்கான நியாயமான பங்கு மறுக்கப்பட்டபோது போராட்ட உணர்வு அவளுள் ஓங்கியது. பெண்ணின் வாழ்வு ஒரு கட்டுக்குள் அடங்கி அவளின் சிக்கல்கள் பின்தள்ளப்பட்ட போது சமூகப் பொருளாதாரம் பண்பாட்டு உரிமைக்காகப் போராடுதலே பெண்ணியம் எனப்பட்டது.

பெண்ணியம் என்பது ஆண் சமுதாயத்தை முழுமையாக எதிர்ப்பதோ, விலக்குவதோ அன்று. மாறாக ஆண் சமுதாயத்தால் அடிமைப்படுத்தப்பட்டு, தனக்கென்று தனித்துவம் பெறாமல் வாழ்நாள் முழுவதும் ஏதாவதொரு வகையில் ஆண்களைச் சார்ந்து வாழ்வதும், அவர்களின் நலம் பேணுவதையே வாழ்வாகக் கொண்டுள்ள நிலையையும் மாற்றுவதற்கான ஓர் இயக்கமாகும்.

உலகின் முதல் பெண் உரிமைப் புத்தகமாகக் கருதப்படுவது இங்கிலாந்தின் மேரி வோல்ஸன் கிரஸ்ட் என்ற பெண்மணி எழுதிய விண்டிகேஷன் ஆப் த ரைட்ஸ் ஆப் வுமன் (Vindication of the Rights of Women) என்பதாகும். இங்கிலாந்தில் ஜான் ஸ்டுவர்ட்மில் எழுதிய பெண்ணடிமைத்தனம் (The subjection of Women) என்ற நூலும் அமெரிக்காவின் சூசன் லாஃபாலட் என்பரின் "பெண்கள் சம்மந்தப்பட்ட" (Concerning Women) என்ற நூலும் வெர்ஜினியா வுல்ப் (Virginia Wolf) என்பவரின் "ஒருவரின் சொந்த அறை " (A Room of One's own) என்ற நூலும் அமெரிக்கப் பெண்களிடையே அதிகப் பாதிப்பை ஏற்படுத்தி பெண் உரிமை இயக்கங்களுக்குத் துண்டுகோலாக அமைந்தன





1886 இல் சுவர்ணகுமாரி தலைமையில் பெண்கள் கூட்டமைப்பு (Ladies Association) உருவானது.

1934ல் சிகாகோவில் நடந்த உலகப் பெண் ஒருங்கிணைப்பு (World Congress of Women) கூட்டத்திற்கு இந்தியப் பெண்கள் சார்பாக டாக்டர். திருமதி.முத்துலெட்சுமி ரெட்டி கலந்து கொண்டு உரையாற்றினார்.

தமிழகத்தின் பெண்களுக்காகப் போராடியவர்கள் பெரும்பாலும் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1914 ஆம் ஆண்டு ரஷ்ய நாட்டில் முதன்முறையாக உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. சீனா, வியட்நாம் உள்ளிட்ட ரஷ்ய நாடுகளில் மகளிர் தினத்தற்கு அரசு விடுமுறை விடப்படுகிறது. அமெரிக்காவில் மார்ச் மாதம் முழுவதும் "பெண்கள் வரலாற்று மாதம்" என்று கொண்டாடப்படுகிறது.




Scanned by CamScanner

# சிலப்பதிகாரம் கூறும் அணி வகைகள்

நுண்ணிய கலை வேலைப்பாடுகளுடன் அணிமணிகள் செய்யும் வினைத்திறம் மிக்க பொற் கொல்லர்கள் பழந்தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர் என்பதை ஆடலரசி மாதவி அணிந்திருந்த மாசறு பொன் நகைகள் நமக்குச் சொல்லாமல் சொல்லுகின்றன.

அரியகம்
கண்டிகை
கணையாழி
குதம்பை
குறங்கு செறி
சதங்கை
சவடி
சரப்பள்ளி
சங்கவளை
சூடகம்
செம்பொன்வளை
செழுநீர்
தூமணிக்கோவை
தொய்யகம்
தோள்வளை
நவமணிவளை
நுண்மைச்சங்கிலி
நூபுரம்
பவழவளை
பாடகம்
பாதசரம்
புல்லகம்

பூண்ஞாண் ஆரம்
மரகதத் தாள்செறி
மாணிக்க மோதிரம்
முத்தாரம்
முடக்கு மோதிரம்
மேகலை
வலம்புரி
வாளைப் பகுவாய் மோதிரம்
விரிசிகை
வீரச்சங்கிலி



தொகுப்பு :
நன்றி - கவிஞர் பல்லவன்






# தேர்வறை

- அ.இராஜலட்சுமி
மூன்றாம் ஆண்டு ஆங்கில இலக்கியம்

தெரிந்த கேள்வி
தெரியாத விடைகளுக்கு
அறியாதவரிடமும் உதவி கேட்கும் தருணம் !
அகன்ற விழியில் அகரவரிசைகளை,
துளாவிக்கொண்டிருந்தால், கண் இமைக்காமல்
நோக்கும் ஆசிரியர்,
கடைக்கண் பார்வையில் களவாடிய விடைகளை
கவலையின்றி எழுதும் கைகள் !!
மானம் பாராது மல்யுத்தத்தால் கிடைத்த விடைகளுக்கு
மதிப்பெண் என்றென்றும் நாற்பது !



# முயற்சி செய்

- மு.இந்திராணி
மூன்றாம் ஆண்டு பொருளாதாரம்
இணைந்த சரக்கு மற்றும்
கட்டண மேலாண்மை

வானிற்குத் தூரமில்லை
வங்கக் கடலிற்கு ஆழமில்லை
காற்றைப் பிடிக்கத் தடையில்லை
வெற்றிக்குப் படிக்கட்டில்லை
ரோஜாவிற்கு முள்ளில்லை
முயற்சி செய் !
உழைப்பிற்கு மதிப்புண்டு
உண்மைக்கு உயர்வுண்டு
நம்பிக்கைக்கு வெற்றியுண்டு
செய்யலாமா என்று யோசிக்காதே
செய்து முடிக்கலாமா என்று யோசி
வானம் உன் வசப்படும்...



# இராணி லட்சுமிபாய்

வெள்ளையரை நேருக்கு
நேர் நின்று எதிர்த்து
வீரச்சமர் புரிந்த
வீரப்பெண்
நாட்டுக்காகத் தன்னையே
தியாகம் செய்த
இளம் சரித்திர நாயகி







# என் அம்மாவிற்காக.... !

- எம்.பிருந்தா
மூன்றாம் ஆண்டு ஆங்கில இலக்கியம்
(அரசு நீதி)

உன் கருவறையில் ஓர் ஓரத்தில்
எனக்கு இடம் கொடுத்து
என்னைப் பாதுகாக்க உன்னை
வருத்திக்கொண்டு நான் அழுது
நீ சிரித்த அந்த நாள் .... !
எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும்
எந்த எதிர்பார்ப்புமின்றி என்னை
இந்த உலகிற்கு அறிமுகப்படுத்தி
நான் உண்பதற்காக நீ உண்ணாமல்
உறங்காமல் உன் உயிரையும் கொடுக்க
துணிந்த அந்த நாள் ... !
பள்ளிப் பருவத்தில் பக்கபலமாய் நின்றாய்
கல்லூரி வாழ்கையில் என் கண்ணாய் மாறினாய்
வரமாய் வந்த கடவுளாய்
என் வாழ்வில் ஒளி வீசினாய்
அடுத்த பிறவியில் உனக்கு மகளாய்
அல்லாமல் உனக்குத் தாயாய்
பிறக்க விரும்புகிறேன், ஏனெனில்
நீ செய்த தியாகத்தை என்னால்
"நன்றி" என்ற ஒற்றை வார்த்தையில்
கூறமுடியாத பாவியானேன்
என் கல்லறையில் உன் காலிடம்
பதிவதற்காக உனக்கு முன்பே
என் உயிரை விடுகிறேன் அடுத்த
ஜென்மத்தில் உன் அன்னையாக... !





Scanned by CamScanner

# இலட்சியம்

- செ.ஜெனனி
இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியம்

விண்ணில் இருக்கலாம்
  ஆயிரம் ஆயிரம் நட்சத்திரங்கள்
மண்ணில் இருக்கலாம்
  ஆயிரம் ஆயிரம் மனித குலங்கள்
மனத்தில் இருக்கலாம்
  ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள்
ஆனால்,
  வாழ்க்கையில் இருக்க வேண்டியது
ஒரே ஒரு லட்சியம்
  அந்த இலட்சியத்தில் நீ உறுதியாக இருந்தால்
உனக்கு வெற்றி நிச்சயம்.







# என் அன்புத் தோழிக்கு

- மு.பத்மஸ்ரீ
இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல்

உன் வாழ்க்கை அழகானது
  அதில் உன் வாழ்நாள்
பயணம் மிகவும் நீண்டது
  உன் காதல் மிகவும்
அழகானது. உன் காதலை
  உணர்ந்த உன் இதயம்
மிகவும் உண்மையானது...
  நேசிப்பவர்களின் இதயம்
அழகானது... உன் அன்பை விட
  உன் வாழ்வில் உனது காதல்
மிகவும் அர்த்தமானது...
  காதலே புனிதமடைந்தது
உனது காதலை கண்ட
  பின்பு தான்...
உன்னைக் கண்ட பின்பு தான்
  உண்மையான அன்பையே
உணர்ந்தேன்... இது வரை
  எவரிடமும் காணாத
அன்பை உன்னிடம் கண்டேன்
  நட்பு என்னும் உறவால் !!





Scanned by CamScanner

# வாழ்க்கை

- வி.சுமிதா தேவி
இரண்டாம் ஆண்டு தகவல் தொழில்நுட்பம்

அன்னையின் கருவறையில் பிறந்து
தந்தையின் அரவணைப்பில் வளர்ந்து.
அண்ணனின் பாசத்தில் மிகுந்து
தம்பியின் சண்டையில் இருந்து
அக்காவின் சொல்படி நடந்து
தங்கையின் பிடியில் இழிந்து
உறவினரின் பழியைச் சுமந்து
ஆசிரியரின் கற்றலைக் கற்று
நட்பின் தோழமையில் அசந்து
பலரின் வார்த்தைகளைக் கேட்டு
தெரிந்தவரின் முகங்களைப் பார்த்து
தெரியாதவர்களின் முகங்களைத் தேடி
காலத்தின் கஷ்டங்களை ஏற்று
காலத்தின் இஷ்டங்களை அனுபவித்து
நியாயங்களை ஏற்று
அநியாயங்களைத் தவிர்த்து
போராடியதற்கு வெற்றியைக் கண்டு
போராடுபவர்களை ஊக்கப்படுத்தி
வாழ்ந்தால் தான் வாழ்க்கை... !







# இளைய பாரதமே எழுந்து வா !

- வி.சுமிதா தேவி
இரண்டாம் ஆண்டு தகவல் தொழில்நுட்பம்

இளைய பாரதமே எழுந்து வா !
இளைய பாரதமே எழுந்து வா !

சமூக வலைதளங்களில் முங்கிக்கிடக்காமல் சிலந்தி,
வலையைப் பின்னுவதைப் போல் - வாழ்க்கையை
சிறு சிறு பின்னல்களாக பின்னுங்கள்...
தயக்கம், பயம், இவற்றைத் தகர்த்திவிட்டு
தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றி
வெற்றிப் படிகளில் ஏறுங்கள்...
தாழ்வுமனப்பான்மையைத் தட்டி எறியுங்கள்
தட்டிக் கொடுக்கும் தோழிகள் உள்ளவரை
தொட்டு விடலாம் சிகரத்தையும் நீங்கள்....
தன்னம்பிக்கையை உறுதிப் படுத்துங்கள்
தோள் கொடுக்கும் தோழன்கள் உள்ளவரை
வெட்டி விடலாம் தோல்விகளையும் நீங்கள்...
வாய்ப்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்,
வாய்ப்புகள் இருக்கும் வரைதான் போராடமுடியும்
வாளால் அல்ல வார்த்தைகளால்...
ஓட்டத்தில் ஆமையைப் போல் இல்லாமல்
முயலைப் போல் ஓட முயற்சியுங்கள்
நீங்களும் வெல்லலாம் இவ்வுலகத்தை...





Scanned by CamScanner

போதைப் பொருட்களின் போர்வையை உதறிவிட்டு
போர்க்களத்திற்குத் தயாராகுங்கள்... உங்களுக்காக
காத்திருக்கிற அமைதிப் போராட்டங்கள்....
கோழைத்தனத்தைக் கோட்டையின் உள்
இட்டு பூட்டிவிடு தோழா - கோடிமுறை
பார்க்கலாம் உன்னையும் வீரனாய்...
கவனம், உழைப்பு, பொறுமை என்னும்
திறவுகோல் இருந்தால் வெற்றி என்னும்
சொர்க்கத்தைக் காணலாம் நண்பா...
இளைஞர்களே ! இது போன்ற தூக்கத்தில் இல்லாமல்,
அப்துல்கலாம் அவர்கள் கூறியதைப் போல்.
விழித்துக் கொண்டு கனவு காணலாம்
நமது கனவுகள் நனவாகும் வரை....
முயற்சி செய்யலாம், பயிற்சி எடுக்கலாம்,
உலகம் நம் கையில்...
இந்தியாவை
நாமும் ஆக்கலாம் வல்லரசாக
20ல் அல்ல 16 ல்....







# அம்மா

- ம.நந்தினி
முதலாம் ஆண்டு கணிதவியல்

உன் அன்புக்கு
எல்லையில்லை
வானத்தைப் போல.
உன் பாசத்திற்கு
அளவில்லை
கடலைப் போல.
நான் அழுதபோது
நீ சிரித்த நாள்
என்னைப் பெற்றெடுத்த
அந்த நாளே !
சிறு தீக்குச்சியாய்
நீ இருந்து கொண்டு
என்னை கூர்விளக்காய்
ஒளிரவைத்தாய்.
ஈரைந்து மாதங்கள்
என்னை
வலியோடு சுமந்தாய்
நான்
ஈரேழு உலகத்தை
ஆளவேண்டும்
என்பதற்காக.
தாயே மீண்டும்
ஒரு ஜென்மம் வேண்டும்
எனக்கு
நீ என் மகளாகப்
பிறக்க.
ஆனால் தெரியவில்லை
எனக்கு அன்றும்
உன்போல் பாசத்தைக்
காட்டமுடியுமா என !



Scanned by CamScanner

# மழை

– அர்ச்சிதா. ந
முதலாம் ஆண்டு இயற்பியல்

வானம் என்னும் மடல்
சொட்டும் அன்பு வார்த்தைகள் மழைத்துளிகள்
அந்த அன்பால் பூரிக்கும் விவசாயிகள்
மழையே உன் அன்புக்கு இல்லை ஈடு இணை
என் தாயால் நான் உயிர் பெற்றேன்
உன் துளிகளால் நான் உயிர் வாழ்கிறேன்.
மழையே உன் அன்புக்கு இல்லை ஈடு இணை
நீ இல்லை என்றால் என் நிலை என்னவோ ?
என்னைத் தழுவுகிறாய் உன் அன்புத் துளிகளால்
மழையே உன் அன்புக்கு இல்லை ஈடு இணை







# ஆண்டறிக்கை : 2015 – 16

## செந்தமிழ் மன்றச் செயல்பாடுகள்

ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் பேரவைத் துவக்க விழா 25.07.2015 அன்று, சனிக்கிழமை ஸ்ரீ ஜி.வி.ஜி கலையரங்கத்தில் நடைபெற்றது. கோவையைச் சேர்ந்த கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் ஜெகதீசன் அவர்கள் பேரவையைத் துவக்கி வைத்தார். பேரவையின் சார்பு மன்றமான செந்தமிழ் மன்றமும் அந்நாளில் தன் செயல்பாட்டினைத் தொடங்கியது.

| | | |
|---|---|---|
| மன்றத் தலைவர் | : | முனைவர்.கு.புனிதவல்லி |
| ஒருங்கிணைப்பாளர் | : | சு.பிருந்தா<br>துணைப் பேராசிரியர், தமிழ்த்துறை (தன்னிதி) |
| மன்ற அமைப்பாளர் | : | 1.முனைவர் சு.சசிகலா<br>துணைப் பேராசிரியர் - தமிழ்த்துறை (தன்னிதி)<br>2. செல்வி. இரா.ஸ்ரீபிரியா<br>துணைப் பேராசிரியர் - தமிழ்த்துறை (தன்னிதி) |
| மன்றச் செயலர் | : | கல்பனா - III வணிகவியல் துறை<br>ந.லாவண்யா - III கணினி அறிவியல் |

இவ்வாண்டு செந்தமிழ் மன்றத்தின் சார்பில் மாணவியர் பல்வேறு போட்டிகளிலும் பங்கேற்று வெற்றி பெற்றனர்.

பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தும் போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவியர் பெரும் எண்ணிக்கையில் போட்டிகளில் பங்கேற்றனர்.



Scanned by CamScanner

## பிற அமைப்புகள் மூலம் நடத்தப்பட்ட போட்டிகள்

பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம், உடுமலைப்பேட்டை வரலாற்று ஆய்வுக் குழு, இறைத்தூதர் கல்வி வளர்ச்சிக் கழகம், கவியரசர் கலைத்தமிழ்ச் சங்கம், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்நாடு கலை இலக்கியக் கழகம் மற்றும் கவிகுன் பதிப்பகம்

| வ எண் | நாள் | அமைப்பு | போட்டி | பங்கு பெற்றோர் |
|---|---|---|---|---|
| 1. | 29.08.2015 | பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி | பேச்சு | 2 |
| 2. | 06.09.2015 | உடுமலைப்பேட்டை வரலாற்று ஆய்வுக்குழு | பேச்சு,<br>வினாடி வினா | 5 |
| 3. | 08.09.2015 | இறைத்தூதர் கல்வி வளர்ச்சிக் கழகம் | கட்டுரை<br>கையெழுத்து | 9<br>11 |
| 4. | 07.09.2015 | கவியரசர் கலைத் தமிழ்ச் சங்கம் | கட்டுரை<br>கவிதை<br>ஓவியம்<br>**மொத்தம்** | 37<br>33<br>14<br>**216** |
| 5. | | கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி | கட்டுரை | 2 |
| 6. | | தமிழ்நாடு கலை இலக்கியக் கழகம் மற்றும் கவிகுன் பதிப்பகம் | ஓவியம்<br>ராங்கோலி<br>கையெழுத்து<br>கவிதை<br>கட்டுரை<br>**மொத்தம்** | 50<br>48<br>143<br>9<br>21<br>**271** |





## மாணவியர் பெற்ற பரிசுகள்

**உடுமலைப்பேட்டை வரலாற்று ஆய்வுக் குழு**

| | |
|---|---|
| **பேச்சுப்போட்டி மூன்றாம் பரிசு -** | **செ.ஜனனி**<br>இரண்டாமாண்டு தமிழ் இலக்கியம் |
| **ஆறுதல் பரிசு -** | 1.ச.கௌசல்யா<br>முதலாண்டு தமிழ் இலக்கியம்<br>2. பூவிழி<br>முதுகலை வரலாறு இரண்டாமண்டு<br>3. தேன்மொழி<br>இரண்டாமாண்டு - வரலாறு<br>4. பிரியதர்ஷினி<br>முதலாண்டு வரலாறு |
| **வினாடி வினா (மூன்றாம் பரிசு) -** | 1.ஸ்ரீ செந்தமிழரசி<br>இரண்டாமாண்டு தமிழ் இலக்கியம்<br>2. சு.கௌசல்யா<br>இரண்டாமாண்டு தமிழ் இலக்கியம்<br>3. பிரியதர்ஷினி<br>முதலாண்டு வரலாறு |
| **கவியரசர் கலைத் தமிழ்ச்சங்கம் -** | **மாநில அளவிலான பரிசுகள்**<br>**கவிதை (ஐந்தாம் பரிசு)**<br>அ.சத்தியப்பிரியா<br>இரண்டாமாண்டு தமிழ் இலக்கியம்<br>**கட்டுரை (ஐந்தாம் பரிசு)**<br>மா.காவியா<br>முதலாண்டு கணிதம் (தன்னிதி) |



Scanned by CamScanner

## செந்தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற போட்டி

| நாள் | பேச்சுப்போட்டி தலைப்பு | பங்கேற்றோர் | பரிசு பெற்றோர் |
|---|---|---|---|
| 22.02.2016 | வையத் தலைமை கொள் | 15 | **1. எஸ்.ரஞ்சிதா** முதலாண்டு முதுகலை வணிகம் **2. எஸ்.அர்சியா பானு** முதலாண்டு சரக்கு மேலாண்மை |






கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் முனைவர் மா.போ.ஆனந்தி




சிறந்த கல்வியாளர் விருது பெற்ற கல்லூரியின் ஆய்வுப்புல இயக்குநர் முனைவர் ஜெ.மஞ்சுளா அவர்களைப் பாராட்டி கவிதை வழங்குகின்றார் முனைவர்.ப.தமிழ்ப்பாவை

Scanned by CamScanner



முனைவர் பட்ட வாய்மொழித்தேர்வில் இணைப் பேராசிரியர் வி.வசுமதி




நிறுவனரின் வாழ்வும் பணியும் பற்றிய கட்டுரையை எழுதி பாடத்திட்டத்தில்
இணைத்தமையைப் பாராட்டி கல்லூரி ஆண்டு விழாவில்
முனைவர் ப.தமிழ்பாவைக்கு பரிசு வழங்கிய நிகழ்வு

Scanned by CamScanner